# வணிகக் கல்வி

## தேர்ச்சி மட்டம் 1.6

## வணிகத்தின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தும் வணிகச் சூழலை வகைப்படுத்திக் காட்டுவர்.



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

## வணிகச் சூழல் (Commercial Environment)

வணிகக் கருமங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் செயற்படுகின்ற சூழலை **வணிகச் சூழல்** என்பர்.

வணிகச் சூழற் காரணிகளைப் பிரதானமாக இரு வகைகளாக வகைப்படுத்த முடியும்.

1. **அகச் சூழல் (Internal Environment)**
2. **புறச் சூழல் (External Environment)**

### அகச் சூழல்

அமைப்பொன்றில் காணப்படுகின்றதும் தாக்கத்தை ஏற்படுத்துவதுமான குழுக்கள், நிலைமைகள் என்பன வணிகம் ஒன்றின் அகச் சூழல் எனப்படும்

### புறச் சூழல்

வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதும் அவ்வணிகத்திற்கு வெளியில் காணப்படும் சகலதும் புறச் சூழல் எனப்படும்.

புறச் சூழல் காரணிகளை இரு வகைப்படுத்த முடியும்.

1. அண்மிய சூழல் / வேலைச்சூழல் (Task Environment)
2. பேரினச் சூழல் / பொதுச் சூழல் (Micro Environment)

### அண்மிய சூழல்

வணிகப் புறச்சூழலுக்குரியவைகளினால் வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற விசேட அமைப்பு அல்லது குழு அண்மிய சூழல் எனப்படும்.

### பேரினச் சூழல்

வணிகத்தின் விரிவான சுற்றுச் சூழலும் அதனுடன் இணைந்து தாக்கத்தை ஏற்படுத்தும் குழுவும் பேரினச் சூழல் எனப்படும்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

வணிகச் சூழல் காரணிகளைப் பின்வரும் பாய்ச்சல் கோட்டு அட்டவணையின் மூலம் சுட்டிக் காட்டலாம்.

**வணிகச் சூழல்**

**அகச் சூழல்**

- உரிமையாளர்
- முகாமையாளர்
- ஊழியர்
- நிறுவனக் கட்டமைப்பு
- நிறுவனக் கலாசாரம்
- வளங்கள்

**புறச் சூழல்**

**அண்மிய சூழல்**

- வாடிக்கையாளர்
- வழங்குநர்
- போட்டியாளர்
- பிரதியீட்டுப் பொருள் உற்பத்தியாளர்
- சந்தையில் பிரவேசிப்பதற்கு எதிர்பார்த்திருக்கும் புதிய வணிகர்கள் (எதிர்கால முதலீட்டாளர்கள்)

**பேரினச் சூழல்**

- பொருளாதாரச் சூழல்
- அரசியல் சூழல்
- சட்டச் சூழல்
- மக்கள் சூழல்
- தொழில்நுட்பச் சூழல்
- இயற்கைச் சூழல்
- சமூக, கலாசாரச் சூழல்
- பூகோளச் சூழல்

**வணிகச் சூழலை கற்பதனூடாக வணிகரொருவர் பெற்றுக்கொள்ளும் நன்மைகள்.**


1. பலங்களை அறிந்து கொள்ளலாம்.
2. பலவீனங்களை அறிந்து கொள்ளலாம்.
3. வணிக வாய்ப்புக்களை அறிந்து கொள்ளலாம்.
4. அச்சுறுத்தல்களை அறிந்து கொள்ளலாம்.

**வணிகச் சூழலின் வகைப்படுத்தலைடப் பின்வரும் வரைபடம் மூலம் முன்வைக்கலாம்.**

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## செயற்பாடு - 01

**வணிகச் சூழல் காரணிகள் பாடசாலைக் கருமங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.**

1. உமது பாடசாலைக் கருமங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் சூழல் காரணிகளை பட்டியல்படுத்துக.
2. அக்காரணிகளை அக, புறச் சூழல் காரணிகள் என வகைப்படுத்துக.
3. இக் காரணிகளைக் கற்பதன் மூலம் பாடசாலை பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகளைக் குறிப்பிடுக.

1. பின்ரும் அட்டவணையில் X நிரலானது சூழலின் வகைப்படுத்தலையும் Y நிரலானது சூழலின் விசைகளையும் எடுத்துக் கொட்டுகின்றது

| X | Y |
|---|---|
| A - அகச்சூழல்<br><br>B- வேலைச்சூழல்<br><br>C - பேரண்டச் சூழல்<br>(பேரினச் சூழல்) | 1. ஊழியர்.கள்<br>2. வாடிக்கையாளர்கள்<br>3. நிறுவனக் கட்டமைப்பு<br>4. தொழில்நுட்பம்<br>5. சமூகக் கலாசாரம்<br>6. எதிர்கால வணிகன் |

2. X ,ற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

1. A- 1, / B - 3,4 / C - 5,6
2. A-1,2 / B- 3,5 / C - 4,6
3. A - 1,4 / B - 2,6 / C - 3,5
4. A- 1,2/ B-3,5 / C-4,6
5. **A - 1,3 / B - 2,6 / C 4,5**

3. நிறுவன நடவடிக்கைகளில் செல்வாக்கு.ச் செலுத்துகின்ற நிறுவனங்களால் கட்டுப்படுத்தக்கூடிய அல்லது கட்டுப்படுத்த முடியாத காரணிகள் அழைக்கப்படுவது

1. அகச் சூழல் காரணிகள்
2. புறச் சூழல் காரணிகள்
3. **வணிகச் சூழல் காரணிகள்**
4. தொழினுட்ப.க் காரணிகள்
5. மேற்கூறிய அனைத்தும்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

3. வணிகத்தினால் கட்டுப்படுத்தக்கூடிய சூழல் ............அகச் சூழல்............ எனவும் கட்டுப்படுத்தமுடியாத சூழல் ............புறச் சூழல்............ எனவும் அழைக்கப்படும்

4. புறச்சூழல் காரணிகளை ............அண்மிய............ சூழல் எனவும் ............பேரண்ட............ சூழல் எனவும் வகைப்படுத்த முடியும்.

5. வணிகப் புறச்சூழலலுக்குரியவைகளினால் வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற வசேட அமைப்பு அல்லது குழு ............பேரண்டச் சூழல............ எனப்படும்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## செயற்பாடு -- 02

வணிக நிறுவனங்கள் சிலவற்றின் பெயர்கள்.

1. வரையறுக்கப்பட்ட பிரித்தானிய கம்பனி
2. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
3. இளைஞர் நற்பணிச் சங்கம்
4. இலங்கை புகையிரதத் திணைக்களம்
5. கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
6. சில்வாவும் சகோதரர்களும்
7. இலங்கை மகாவலி அதிகார சபை
8. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
9. மாதுரி ஸ்ரோர்ஸ்
10. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு
11. ஹற்றன் நசனல் வங்கி (PLC) லிமிரெட்

**1.** மேற்குறிப்பிட்ட வணிகங்களை பின்வரும் வணிக அமைப்பு வகைகளிற்கான உதாரணங்கள் என்ற அடிப்படையில் குறிப்பிடுக.

1. தனியுடமை வணிகம்
2. பங்குடமை வணிகம்
3. கூட்டிணைக்கப்பட்ட தனியார் கம்பனி
4. பொதுக் கம்பனி
5. கூட்டுறவு
6. சங்க அமைப்பு
7. கூட்டுத்தாபனம்
8. திணைக்களம்
9. அரச கம்பனி

**2.** 1. தனியுடமை வணிகங்கள் -............................ 2. அரச துறை வணிகங்கள் ...........................................

3. பொதுத்துறை வணிகங்களில் பொதுக் கூட்டுத் தாபனங்களிலும் பார்க்க அரசாங்கத்திற்கு சொந்தமான பொதுப் பணிகள் வணிகப் போட்டிக்கு முகம்கொடுப்பதற்கு மிகவும் பொருத்தமானவையாகும். இக் கூற்றை நியாயப்படுத்தும் இரண்டு விடயங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk